[2022 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மணப்பாறை தொகுதியில் Hockey stadium கேட்டிருக்கிறார்கள். அதற்கான கருத்துருக்கள் ஆராயப்பட்டு, வாய்ப்பு இருப்பின் அங்கே புதிய hockey மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

போளூர், இரயில்வே மேம்பாலப் பணியைத் துரிதப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூரில் நடைபெற்றுவரும் இரயில்வே மேம்பாலப் பணிகளைத் துரிதப்படுத்துவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கெண்டுவருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை, உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

கடலூர்–சித்தூர் சாலையில் இரயில்வே கடவு எண் 80–க்குப் பதிலாக போளூர்–ஆரணி இரயில் நிலையங்களுக்கிடையே சாலை மேம்பாலம் கட்டும் பணியில் இரயில்வே பகுதி மற்றும் அதனை அடுத்துள்ள இரு ஓடுதளங்கள் தவிர, மீதமுள்ள 10 ஓடுதளங்களும் முடிக்கப்பட்டு, 80 சதவிகித பணிகள் முடிவுற்றன. இரயில்வே பகுதி பணிகள் இரயில்வே துறையினரால் தொடங்கப்பட வேண்டும். இரயில்வே பகுதி பணிகள் முடிந்தபின், மீதமுள்ள இரண்டு ஓடுதளங்களும் விரைந்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் போதிய விவரங்கள் இல்லை. திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர் நகரம் வளர்ந்து வருகின்ற நகரமாக பரிணாமம் பெற்று வருகின்றது. போளூர் நகரத்தில் ஏற்பட்ட போக்குவரத்து வாகன நெரிசல், மக்கள்தொகை அதிகரிப்பு, வியாபார வளர்ச்சி, விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற விவசாய விளைபொருட்களை வேளாண் விற்பனைக் குழுவிற்குக் கொண்டு வருதல், மருத்துவ சிகிச்சை பெற வரும் நோயாளிகள், ஆன்மீகத் தலங்களை தரிசிக்க வரும் பக்தர்கள், வங்கிகளுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள், பள்ளிகளுக்கு வருகை தரும் மாணவ, மாணவிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள், தென் மாவட்டங்களிலிருந்து வட மாவட்டங்களுக்கு சாலை மார்க்கமாகவோ, இரயில் மார்க்கமாகவோ பயணம் செய்வதாக இருந்தாலும்கூட, போளூரில் உள்ள இரயில்வே கடவைக் கடந்துதான் செல்ல வேண்டும். போளூர் பகுதி மக்களின்

கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் திட்டம் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் நிதி மற்றும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டன.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட பணிகளில் இதுவரை 80 சதவிகிதப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வழக்கு போன்ற காரணங்களால் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவடையாத காரணத்தினால் இரயில்வே கடவு பகுதியில் மட்டும் இரயில்வே துறையின்மூலம் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. தற்போது வழக்கின் தீர்ப்பு அரசிற்கு சாதகமாக வந்துள்ள சூழ்நிலையில்,—போளூர் நகருக்கு வருவதற்கு 4 கி.மீ. சுற்றி வரவேண்டியுள்ளதால், மக்களின் சிரமத்தைக் குறைக்க உடனடியாக நிலம் கையகப்படுத்தும் பணியை நிலம் எடுப்புச் சட்டத்தின் மூலமாகவோ அல்லது தனிநபர் பேச்சுவார்த்தையின் மூலமாகவோ விரைந்து முடித்து, இம்மேம்பாலத்தை பொது மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர்–சித்தூர் சாலையில் இரயில்வே கடவு எண் 80–க்குப் பதிலாக, போளூர்–ஆரணி இரயில் நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் கட்டும் பணிக்கான அனுமதியை இரயில்வே துறை 2014–2015 ஆம் ஆண்டு வழங்கியது. இதற்கான மதிப்பீட்டிற்கு 27.89 கோடி ரூபாய்க்கு நெடுஞ்சாலைத் துறை ஒப்புதல் வழங்கியது. இப்பணிக்கான ஒப்பந்தம் 20–9–2018 அன்று செயல்படுத்தப்பட்டது. மொத்த மதிப்பீட்டில் 50 சதவிகிதம் மாநில அரசாங்கமும், 50 சதவிகிதம் ஒன்றிய அரசாங்கத்தின் இரயில்வே துறையும் ஏற்றுக்கொண்டன. ஆனால், இரயில்வே துறை பகுதிக்கான கட்டுமானத்தை மட்டும் இரயில்வே துறையே செய்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகள் கொஞ்சம் காலதாமதமாக இருந்தன. இந்த நிலையில், இப்பணியினை 27–3–2020–க்குள் முடித்திருக்க வேண்டும்.

இரயில்வே மேம்பாலத்தின் 80 சதவிகிதப் பணிகள், மாநில அரசாங்கத்தின்மூலம் கட்டப்பட வேண்டிய பணிகளெல்லாம்

2022 ஏப்ரல் 11] [திரு. எ.வ. வேலு]

நடைபெற்றுவிட்டன. இரயில்வே துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டிய இரயில்வே பகுதிப் பணிகள் காலதாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காக, தமிழ்நாட்டில் இப்படித்தான் இரயில்வே மேம்பாலப் பணிகள் எல்லாம் காலதாமதமாகின்றன என்பதை உணர்ந்த காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்து, இதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று ஒருமுறை ஆய்வுக் கூட்டத்தில் சொன்னார்கள். அந்த அடிப்படையில் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள், ஒன்றிய அரசாங்கத்தினுடைய இரயில்வே துறை சம்பந்தப்பட்ட பொறியாளர்கள், பொது மேலாளர்கள் ஆகியோரை 2 மாதங்களுக்கு ஒரு முறை அழைத்து, பணிகளையெல்லாம் சீக்கிரம் செய்து முடிக்க வேண்டுமென்று, ஆய்வுக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே, இந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்யும். அதோடுமட்டுமல்ல, நில எடுப்பைப் பொறுத்தவரையில் வெகு காலமாக அதுசம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருந்தது. அதில் இப்போதுதான் அரசுக்கு சாதகமாக ஒரு தீர்ப்பு கிடைத்திருக்கிறது. 0.35 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய பணி மட்டும்தான் இப்போது இருக்கிறது. சென்ற வாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து நான் பேசியிருக்கிறேன். அவர்கள்மூலம் அந்தப் பணிகளையெல்லாம் விரைந்து முடித்து, விரைவிலேயே போரூர் மேம்பாலத்தை திறப்பதற்கு இந்த அரசின் சார்பாக அக்கறை எடுத்துக்கொள்வோம். காரணம், கலசப்பாக்கம் பகுதியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ.சு. தி. சரவணன் அவர்களும் அந்தப் பாதையின் மூலமாகத்தான் ஜமுனாமரத்தூருக்குச் செல்ல வேண்டும். அதனால், அவரும் இதுகுறித்து தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். எனவே, இந்த அரசு அந்த மேம்பாலம் கட்டுகின்ற பணியை விரைந்து நிறைவு செய்யும்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் இருவருமே நிறைய விஷயங்களைச் சொல்லிவிட்டீர்கள். நன்றி சொல்லி, முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

[*2022 ஏப்ரல் 11*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வால் மதிப்பீட்டுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதா? அப்படியென்றால் எவ்வளவு தொகை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது? எவ்வளவு காலவரையறைக்குள் இப்பணி முடிக்கப்படும்? இரயில்வே துறையின்மூலம் செய்ய வேண்டிய பணிகளைத் துரிதப்படுத்த இரயில்வே துறையை அரசு வலியுறுத்துமா எனக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு விவரமாக கருத்து சொல்லிவிட்டார்கள் என்று நீங்கள் முதலிலேயே சொல்லிவிட்டீர்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், பொதுவாகவே, தமிழ்நாட்டில் இரயில்வே மேம்பாலங்களை காலதாமதமாகக் கட்டுவது என்பது காலங்காலமாகவே இருந்து வருகிறது. இந்தப் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான், இத்துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள், சம்பந்தப்பட்ட பொறியாளர்கள், ஒன்றிய அரசாங்கத்தைச் சார்ந்த இரயில்வே துறையின் பொது மேலாளர்கள் ஆகியோரையெல்லாம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அழைத்துப் பேசிக்கொண்டிருக்கிறோம். கையகப்படுத்த வேண்டிய நிலம் என்பது 0.35 ஹெக்டேர்தான். அதற்கு வேண்டிய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ற பதிலையும் நான் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர், இரண்டாவது கேள்வி கேட்க வேண்டுமென்பதற்காகவென்றே இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கின்றார். கட்டாயம் இந்த இரயில்வே பாலத்தைக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.*

3. அரசினர் தனித் தீர்மானம்

மத்தியப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு படிப்புகளில் சேர்வதற்காக நடத்தவிருக்கும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வினை இரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*